# படிப்பு உதவிகள்


இயேசுவின்
ஊழியத்தின்
போது பலஸ்தீனம்
ஒலிவ மலை
எரிகோ
எருசலேம்
பெத்பகே
பெத்தானியா
சவக்
கடல்
கலிலேயா
கலிலேயாக்
கடல்
தெக்கெப்போலி
யோர்தான் நதி
சமாரியா
பெருங் கடல்
பெரேயா
எப்பிராயீம்?
எரிகோ
எருசலேம்
பெத்பகே
பெத்தானியா
யூதேயா
சவக்
கடல்

## எருசலேம் நகரமும் அதைச் சுற்றியிருந்த பகுதியும்



# இயேசு மற்றும்/அல்லது வேத வசனங்கள்

இயேசு மற்றும் வேத வசனங்கள் பற்றி சமீபத்தில் ஒரு வாக்குவாதம் எழும்பிற்று. "இயேசு, ஆம்; வேத வசனங்கள், இல்லை" என்பதே நமது எண்ணப்போக்காக இருக்க வேண்டும் என்று சிலர் உறுதிப் படுத்துகின்றனர். இயேசுவைக் கொண்டிருந்து வேத வசனங்களைப் புறக்கணித்தல் என்பது சாத்தியமானதாக உள்ளதா? இயேசுவை வேத வசனங்களில் இருந்து பிரிக்க முடியுமா?

## இயேசு vs. வேத வசனங்கள்

சத்தியத்தின் சிறு கூறுகளைக் குறித்து விரோதப் போக்குகள் எழும்பிற்று, ஆனால் கடைசியில் இவைகள் சத்தியத்தைப் புரட்டுவதை விளைவிக்கின்றன. நாம் வேத வசனங்களையல்ல இயேசுவையே ஆராதிக்க வேண்டும் என்பது உண்மையே. இயேசுவை இருதயத்தில் மேன்மைப்படுத்த வேண்டும். அவர் ஒருவரே வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் உடையவராக இருக்கின்றார் (மத். 28:18). முழங்கால் யாவும் அவருக்கு முன்பாக முடங்கும், நாவுகள் யாவும் அவரை அறிக்கை பண்ணும் (பிலி. 2:9-11). வேத வசனங்கள் இவ்விதமான ஆராதனையைப் பெறத் தகுதியானவை அல்ல.

வேத வசனங்கள் மேன்மைப் படுத்துவதற்காக இருப்பதில்லை. வேத வசனங்களை வெளிப்படுத்திய பரிசுத்த ஆவியானவரைப் பொறுத்த மட்டிலும் இதுவே உண்மையாக உள்ளது. அப்போஸ்தலர்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்திய சத்திய ஆவியானவரைப் பொறுத்த மட்டில் (யோவா. 16:13), இயேசு, "அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்" என்று கூறினார் (யோவா. 16:14). ஆவியானவரால் தரப்பட்ட வெளிப்படுத்து தலானது ஆவியானவரையோ அல்லது ஆவியானரால் தரப்பட்ட வேத வசனங்களையோ அல்ல, ஆனால் இயேசுவையே மகிமைப்படுத்தும். இயேசுவுக்கு மேலாக ஆவியானவரையோ அல்லது வேத வசனங்களையோ மகிமைப்படுத்துதல் என்பது இயேசுவுக்கு உரிய மகிமையைக் களவு செய்தல் என்பதாக இருக்கும்.

## இயேசுவும் வேத வசனங்களும்

வேத வசனங்கள் இயேசுவை நமக்கு வெளிப்படுத்துவதாலும், அவரது போதனையை உள்ளடக்கியிருப்பதாலும், இவைகள் முக்கியமானவை களாக உள்ளன. வேத வசனங்கள் இல்லாமல், நாம் (1) இயேசுவைப்பற்றிய அறிவை, (2) இயேசுவே கிறிஸ்து என்பதற்கான தீர்க்கதரிசன ஆதாரத்தை, (3) அவர் தேவனுடைய குமாரன் என்று நம்மை நம்பியிணங்கச் செய்யும் அவரது அற்புதங்கள் பற்றிய எடுத்துரைப்புக்களை, (4) நமது விசுவாசத்

*திற்கான அடிப்படையை, (5) நாம் பின்பற்றுவதற்கு ஒரு மாதிரி என்ற வகையில் அவரது வாழ்வு பற்றி விவரிப்பை, மற்றும் (6) இரட்சிக்கப்படுதல் எவ்வாறு என்று கற்கும் திறமையைக் கொண்டிருக்க மாட்டோம்.*

## வேத வசனங்களின்றி இயேசுவைப் பற்றிய அறிவு இல்லை

*பிலிப்பு, வேத வசனங்களை வாசித்துக்கொண்டிருந்த எத்தியோப்பிய மந்திரி ஒருவரைச் சந்தித்தார். இந்த எத்தியோப்பியர், ஏசாயா 53:7, 8 வசனங்கள் பற்றி ஒரு கேள்வியைக் கேட்டார், மற்றும் பிலிப்பு இவருக்கு இயேசுவைப் பற்றிப் போதித்தார். எப்படி? "அப்பொழுது பிலிப்பு பேசத் தொடங்கி, இந்த வேத வாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக்குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்" (அப். 8:35). எத்தியோப்பிய மந்திரிக்கு வேத வாக்கியங்களை விளக்கியுரைத்தல் என்பதே பிலிப்பு அவருக்குப் போதித்த வழிமுறையாக இருந்தது.*

## வேத வசனங்களில் உள்ள தீர்க்கதரிசனங்கள் இயேசுவே கிறிஸ்துவாக இருக்கின்றார் என்று நிரூபிக்கின்றன

*இயேசுவைக் குறித்தே வேத வசனங்கள் பேசின என்று இயேசுவே போதித்தார். யூதர்களிடத்தில் அவர் "வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணு கிறீர்களே, என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே" என்று கூறினார் (யோவா. 5:39). வேத வாக்கியங்களைக் குறித்து அப்போஸ் தலர்களின் புரிந்துகொள்ளுதலை இயேசு திறந்து வைத்தார். அவர், மோசேயின் நியாயப்பிரமாணங்களையும், தீர்க்கதரிசனங்களையும், சங்கீதங்களையும் தாம் நிறைவேற்றியது எவ்வாறு என்பதை அவர்களுக்குக் காண்பித்தார் (லூக். 24:44, 45). பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு, தீர்க்கதரிசனத்தை இயேசு நிறைவேற்றினார் என்பதை நிரூபிப்பதற்கு வேத வசனங்களில் இருந்து மேற்கோள் காண்பித்தார் (அப். 2:25-36).*

*மக்களை, இயேசுவே கிறிஸ்து என்று நம்பி ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு வேத வசனங்களின் தீர்க்கதரிசனங்களைப் பயன்படுத்துதல் என்பது பவுலின் நடைமுறையாக இருந்தது. "பவுல் தன் வழக்கத்தின்படியே அவர்களிடத்தில் போய், மூன்று ஓய்வுநாட்களில் வேத வாக்கியங்களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷித்து, கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும், நான் உங்களுக்கு அறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்து என்றும் காண்பித்து, திருஷ்டாந்தப் படுத்தினான்" (அப். 17:2, 3). அப்பொல்லோவும் இதே வழிமுறையில் வேத வசனங்களைப் பயன்படுத்தினார் (அப். 18:28).*

## இயேசுவின் அற்புதங்கள் நிரூபணத்திற்காகவே பதிவுசெய்யப்பட்டுள்ளன

*வேத வாக்கியங்கள் இன்றி நாம் இயேசுவே கிறிஸ்து என்பதற்கு நிரூபணம் எதையும் கொண்டிருக்க மாட்டோம். இயேசு நிகழ்த்திய அற்புதங்களின்மூலம், தேவன் இயேசுவுக்குத் தமது அங்கீகாரத்தைக் காண்பித்தார் (அப். 2:22). இயேசுவை கிறிஸ்து என்று நாம் ஏற்றுக் கொள்ளும்படியாக இந்த அற்புதங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. "இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப் பட்டிருக்கிறது" (யோவா. 20:30, 31).*

## வேத வசனங்கள் இயேசுவின்மீதான விசுவாசத்திற்கு அடிப்படையாக உள்ளன

*நமது விசுவாசம் என்பது வெளிப்படுத்தப்பட்ட வார்த்தையைச் சார்ந்துள்ளது. அப்போஸ்தலர்களின் வார்த்தையினால் இயேசுவை விசுவாசிப்பவர்களுக்காக இயேசு ஜெபித்தார். விசுவாசம் தேவனுடைய வசனத்தினாலேயே வருகிறது. பெரேயாவில் இருந்தவர்கள் "மனோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால்" விசுவாசத்திற்குள் வந்தனர் (அப். 17:11, 12). வேத வசனங்களின்றி, நாம் இயேசுவே கிறிஸ்து என்று முடிவு செய்ய இயலாதவர்களாயிருப்போம்.*

## இயேசுவின் வாழ்வு நமது மாதிரி என்ற வகையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது

*நாம் இயேசுவில் விசுவாசம் கொள்ளும்படிக்கு வேத வசனங்கள், இயேசுவே கிறிஸ்து என்பதற்கு நிரூபணத்தைக் கொடுப்பது மட்டுமின்றி, நமது மாதிரி என்ற வகையில் பின்பற்றத்தக்கதாக இயேசுவினுடைய வாழ்வின் வழிமுறை பற்றியும் அவைகள் நமக்கு வெளிப்படுத்துகின்றன. "அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்த படியே தானும் நடக்கவேண்டும்" (1 யோவா. 2:6). வேத வசனங்களின்றி, அவர் எப்படி வாழ்ந்தார் என்பதை நாம் அறியமாட்டோம். நாம், அவருடைய வாழ்வின் மாதிரியில் நமது வாழ்வை அமைக்க இயலாது.*

## வேத வசனங்களின் மூலமாக இரட்சிப்பு பற்றிய அறிவு

*வேத வசனங்கள் நமது இரட்சிப்பின் ஆதாரமூலமான இயேசுவை வெளிப்படுத்துகின்றபடியால், அவைகளின்றி நாம் இரட்சிக்கப்படுவது எவ்வாறு என்பதை நாம் அறிய முடியாது. வேத வசனங்களின்றி நாம் இரட்சிக்கப்படக்கூடுமென்றால், நாம் இயேசுவைப் பற்றி அறியாமலேயே இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். இயேசுவைப் பற்றிய தகவலுக்கு வேத வசனங்கள் மட்டுமே நமது அஸ்திபாரமான ஆதாரமூலமாக உள்ளன. அதனால்தான், வேத வசனங்கள் நம்மை இரட்சிப்புக்கேற்ற ஞானவான்களாக்கும் சக்தியுடையவைகளாய் உள்ளன. பரிசுத்த வேத எழுத்துக்கள் தீமோத்தேயுவை "இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத் தக்க"வைகளாயிருந்தன என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதினார் (2 தீமோ. 3:15).*

*வேத வசனங்களில் தேவனுடைய வார்த்தை அடங்கியுள்ளது, இது இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று வெளிப்படுத்துகிறது (அப். 11:14; 1 கொரி. 15:2), பாவத்திலிருந்து விடுதலையைக் கொண்டு வருகிறது (யோவா. 8:31, 32), ஒப்புரவாக்குதலின் செய்தியைக் கொண்டுள்ளது (2 கொரி. 5:19), நித்திய ஜீவனை அளிக்கிறது (யோவா. 6:68), பரிசுத்தமாக்குதலின் ஆதாரமூலமாக உள்ளது (யோவா. 17:17), நமது சுதந்திரத்தை அளிக்கிறது (அப். 20:32), மற்றும் புதிய பிறப்பின் அடிப்படையாக உள்ளது (1 பேது. 1:23).*

## முடிவுரை

*இயேசு மற்றும் வேத வசனங்கள் என்ற இரண்டிற்குமிடையில் ஒன்றை நாம் தேர்ந்துகொள்ள முடியாது; நாம் இவ்விரண்டையும் கொண்டிருக்க வேண்டும். வேத வசனங்களின்றி நாம், இயேசுவையும் அறியமாட்டோம், அவரைப் பற்றியும் அறியமாட்டோம். நமது இரட்சிப்புக்கு தேவனுடைய வசனங்கள் இன்றியமையாதவைகளாக உள்ளன: இயேசுவைப் பற்றிய வேத வசனங்களின் வெளிப்படுத்துதல் நமக்கு இல்லாதிருந்தால், நாம் நித்தியத்திற்கும் இழந்துபோகப்பட்டவர்களாயிருப்போம்.*

*வேத வசனங்களைத் தாழ்த்தி மதிப்பிடுகின்றவர்கள், மனிதகுலத்திற்குத் தேவன் ஏவுதல் செய்து வெளிப்படுத்தியுள்ளவற்றைத் தள்ளிவிடுகின்றனர் (2 தீமோ. 3:16). வேத வசனங்களைப் படிப்பதால் மட்டுமே தேவனுடைய மனிதன் "தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்க" முடியும் (2 தீமோ. 3:17). வேதவசனங்களை நீக்கிப் போடுகின்றவர்கள், பரலோகத்தில் வாழ்வு (1 பேது. 1:3, 4) என்ற நமது நம்பிக்கையை (ரோமர் 15:4) நம்மிடத்திலிருந்து களவு செய்கின்றவர்களாய் இருப்பார்கள்.*

*ஒவென் டி. ஆல்பிரிக்ட்*